ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

எட்டாந் தொகுதி.

பத்திராதிபன்:— பண்டித. ஆ. அரங்கராமாநுஜன்.

மதுரை,

ஹரிஸமய திவாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிரமோதூத—பிரஜோற்பத்தி.

1931—1932.

ஸ்ரீ:

எட்டாந் தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அத்யவஸாயத்தின் பெருமை:-	ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி.	19, 35, 93, 108
ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்:-	ப. அ.	37, 90, 130
எம்பெருமானார் அவதாரரஹஸ்யம்:-	ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி.	140
ஊர்த்வ புண்ட்ர நிர்ணயம்:-	நியாயவேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ரெங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி.	22
கலிதருமம்:-	ப. அ.	6
கலியின் குணம்:-	,, … … …	11
கம்பர் கடவுள்வாழ்த்து:-	,, … … ….	41
காஞ்சீபுரம் ஸ்ரீவைகுண்டப்பெருமாள் ஸந்நிதி மஹாத்மியம்:-	குப்பண்ணு என்ற ஸ்ரீ.உ.வே. ராமானுஜாசார்ய ஸ்வாமி.	155
சததனு உபாக்யானம்:-	,, … … …	125
ஸத் ஸம்ப்ரதாய ஸபை:-	… …. … …	147
சூரியாதத்தின் பெருமை:-	… … … …	160
திவாகரத்தின் எட்டாவதாண்டு:-	… … …	1
திருநாரணன் திருத்தாள் திரள்:-	மூ. காரிமாறன் ராமானுஜ தாஸர்.	114

திருவள்ளுவர் கடவுள்வாழ்த்து:- ஸ்ரீமான்
இராகவராமாநுஜ தாஸர்; மதுரை. 120

திருவல்லிக்கேணி ராமாநுஜகூடக் கைங்கர்யம்:- ஸ்ரீமான்.
R. அப்பாத்துரை முதலியார், மதராஸ். 162

நம்பிள்ளை வைபவம்:- ஸ்ரீ. உ. வே.
ரெ. ராமய்யங்கார் ஸ்வாமி. 25, 49, 69

நன்கொடை:- ப. அ. 55, 116, 175

நம்பெருமாளது நடையழகு:- ஆ. வ. பத்மநாப
ராமாநுஜ தாஸர், ஆரியூர். 101

நவராத்ரி மஹோத்ஸவம்:- ப. அ. .. 146

பன்பணித்திறள்:- ,, ... 14, 57, 165,

பழவினை:- ... ... ,, ... 133

பசுபரிபாலனம்:- ஸ்ரீ. உ. வே. திருநாராயணையங்கார் ஸ்வாமி. 77

மதிப்புரை:- ப. அ. 56, 100, 116, 148, 164, 172

முதலியாண்டான் பத்துவார்த்தை. ,, ... 117

முக்கோற்பகவர்:- ... ,, ... 61

மணவாள மாமுனிகள் கண்ணிநுண் சிறுத்தாம்பு. ... 149

ஸ்ரீ வைஷ்ணவ மஹாநாடு:- ஸ்ரீமான் வெ. கிருஷ்ணராமாநுஜ
தாஸர், பண்ருட்டி. 46

எட்டாந்தொகுதியில் வெளிவந்த புஸ்தகம்,

அண்டகோள விருத்தி:- ஸ்ரீ. உ. வே திருநாராயணையங்கார்
ஸ்வாமி செந்தமிழ்ப் பத்திராதிபர். 17, 33

இருசமய விளக்கம்:- 1, முதல் 156

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ[illegible]ய திவாகரம்.

தொகுதி அ. பிரமோதூத வருஷ தைமீ பகுதி க.
Vol 8. January & February 1931. No. 1.

திவாகரத்தின் எட்டாவதாண்டு.

திருவடிவிற்கருநெடுமால்சேயனென்றும்
திரேதைக்கண்வளையுருவாய்த்திகழ்ந்தானென்றும்
பெருவடிவிற்கடலமுதங்கொண்டகாலம்
பெருமானைக்கருநீலவண்ணன்தன்னை
ஒருவடிவத்தோருருவென்றுணரலாகாது
ஊழிதோறூழிநின்றேத்தலல்லால்
கருவடிவிற்செங்கண்ணவண்ணன்றன்னை
கட்டுரையேயாரொருவர்காண்கிற்பாரே.

திருவாளனாகிய எம்பெருமான் திருவருளால் நமது திவாகரத்தின் ஏழாவதாண்டு இனிது நிறைவேறி எட்டாவதாண்டு தொடங்கப்பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நமது திவாகரத்தினிலைமையைக் குறிப்பிட்டுரைத்து வருகிற முறையில் இவ்வாண்டினியல்பும் இங்குரைக்கப்படுகிறது.—

பொருளொன்றே இம்மையிற் பெருந்துணையாகவிருக்கிறதென்பதைச் சாணக்கியன் முதலானவர்களும், "பொருளிலார்க்கிவ்வுலகமில்லை" என்று நீதி நூலாரும் தெளிவாகக் கூறினார்கள். இவர்கள் இங்ஙனமுரைப்பக் கேட்பதன்றிக்கே, பொருள் பேருபகாரமாயிருப்பதை யாவரும் கண்கூடாகவறிவார்கள். இது பேருப

காரமாயிருக்கினும் இதனியல்பை யாராய்ந்து பார்த்தால் நிலைபேறற்றதாயிருக்குமென்பது வெளியாகும். இத்தகைய நிலைபேறற்ற பொருளால் நம் திவாகரம் நிலைபெறுகிறதென்கிற வுண்மை நிலைபெறவாகாதென்று எம்பெருமான் நிலைபேறற்றதன் திருவருளால் நிலைபெறச்செய்து வருகின்றனன்போலும். அதனுள் இது பெரியோரின் சொல்வன்மையாகிய கிரணங்களைப்பெற்று மாந்தரின் அகவிருளகற்றி வருகிறது.

கழிந்த சிலவாண்டுகட்குமுன் திவ்யதேசங்களில் உத்ஸவாதிகளில் ததியாராதனம் மிகவும் அருகியிருந்தன. இப்பொழுது அவ்வாராதனம் பலவிடங்களிலும் சிறப்பாகவே நடைபெறுகின்றன. அங்கு வைஷ்ணவ குழாங்களும் மிகுதியாகவே காணப்படுகின்றன. இதனால் சிலவாண்டுகட்கு முன்னிருந்த நிலைமையினும் இப்பொழுது வைஷ்ணவ சமயத்தவர்கள் அதிகமாகவே இருக்கின்றார்களென்று நிச்சயிக்கலாம். இங்ஙனமிருந்தும் நம் திவாகரத்தை ஆதரிப்பார் அரியாராகவே இருக்கின்றனர். நம சமயவுண்மையை அறிந்துகொள்ளவேண்டுமென்ற கருத்து அவர்கட்கில்லாமையே இதற்குக் காரணமாகும்.

தற்கால நிகழ்ச்சியைக் குறித்துப் பேசுகின்ற பத்திரிகைகள் எத்தனையோ உலகில் உலாவுகின்றன; பெரும்பாலரும் அவற்றை வாங்கிப் பயின்று அங்காங்குள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்கின்றனர். இந்தப பத்திரிகைகளால் ஒரு சிலர்க்கு இம்மையிற் பிரயோஜனம் சிறிதுண்டு. இந்தப் பிரயோஜனமும் சிறிதுமில்லாததோடு மறுமையில் அநர்த்தத்தையே பலனாக விளைக்கத்தக்க சில நாஸ்திகவாதப் பத்திரிகைகளும், அதர்மத்தைத் தர்மமாகக்கருதிப் பேசுகிற பத்திரிகைகளும் நடையாடுகின்றன. இவற்றையும் பொருள் வியஞ்செய்து வாங்கிப் படித்து மகிழ்வடைகின்றனர். காலகதியை என்னென்பேம்.

உலகினர் பொருள் பூமி முதலியவைகளை தமக்கு வேண்டிய அளவு கிடைத்தாலும் 'இதுவும் போதாது; இதுவும் போதாது' என்று ஒவ்வொன்றிலும் குறைபாடுடையவராகவேயிருக்கின்றனர்.

அறிவு என்ற ஒரு அம்சத்தில் மாத்திரம் 'எமக்கறிவில்லை' என்று குறையுறுவார் அரியராவார். ஆதலால ஆத்மாவின் உண்மை முதலியவற்றைத் தெரிவிக்கின்ற நம திவாகரம் போன்ற பத்திரிகைகளை ஆதரிப்பார் அரியராயிருக்கின்றார் என்பதும் இயல்புதானே என்று சமாதானஞ் செய்துகொள்வோம்.

தன் ஸங்கல்பத்தால் எல்லாவற்றையும் தோற்றுவிக்கின்ற ஸர்வேச்வரனும் நம்மை நல்வழிப்படுத்துவதற்கு மண்ணிற் பிறந்து படாதபாட்டைப்பட்டான். ஸர்வஜ்ஞராகிய எம்பெருமானாரும், ஒவ்வோரிடங்களிலும் சென்று சமய உண்மையைத் தெரிவித்து ஆங்காங்குள்ளவர்களை நல்வழிப்படுத்துவதற்கு எவ்வளவோ பிரயாசையடைந்தனர். இதனால் உலகினரை நல்வழிப்படுத்தவேண்டுமானால் அவரவர்களிருக்குமிடஞ் சென்று உண்மையைப் போதிப்பித்து அவர்களை உய்விப்பிக்கவேண்டுமென்பது விளங்கும். இத்தகைய பணியை மேற்கொள்ளவாரில்லாதிருப்பது ஸாது ஸித்தாந்தத்திற்குப் பெருங்குறையன்றோ! நமது எம்பெருமானார் நம் சமயமாகிய பைங்கூழை (பயிரை)ப் புறச்சமயமாகிய பட்டிப்பசுக்கள் புகுந்தழிக்காமல் ஸ்ரீபாஷ்ய முதலிய க்ரந்தங்களாகிய வேலிகளிட்டுப் பாதுகாத்து வைத்தாரேனும் நாம் பைங்கூழிற்கு நீர் விடாவிட்டால் அது வாடுமன்றோ! இப்பைங்கூழிற்கு நீர் பாய்ச்சி அது மேன்மேலும் வளரும்படி செய்யவேண்டியதும் நம் சமயச்சார்பினர் எல்லோருக்கும் முக்ய கடமையாகுமல்லவா. நம் சமயத்தை உயிரினும் பெரிதாகக்கருதி ஆதரிக்கவேண்டுமென்பதை நம்மனோர்க்கட்கறிவிப்பதாகன்றோ பண்டு கிருமிகண்டசோழனது சபையில் நங்கூரத்தாழ்வானும், பெரியநம்பிகளும் படாதபாட்டையடைந்தனர். இவ்வுணர்ச்சி நமக்கிருக்குமானால் நம சமயவிஷயத்தில் ஊனுறக்கமின்றிப் பாடுபடுவதற்கு முன்வருவோமன்றோ!

தர்மபுத்திரர், யக்ஷனை நோக்கி நாடோறும் உயிர்கள் யமபுரத்திற்குச்சென்றுகொண்டிருக்கின்றன. இங்ஙனமிருக்கவும் சென்றவரொழிய செல்லாது எஞ்சிநின்றவர்கள் இஃதறியாது தாம் நிலைத்திருப்பதாக எண்ணுகிறார்கள். ஆதலால இதுதான் ஆச்சர்யமென்றுரைத்தனர். இவ்வாச்சர்யம் உலகில் நிலைபெற்றிருப்பதால் நித்யா

நித்யங்களை உபதேசிக்கின்ற பெரியாரின் பெருமையையும், அவர்கள் மேற்கொண்ட சமயத்தின் சீர்மையையும், வாழ்நாளை இவ்வாறு கழிக்கவேண்டுமென்ற முறையையும் எடுத்துரைத்தால் செவி மடுத்துக் கேட்பார்களும் துர்லபராயிருக்கின்றனர். இக்கொடியகாலத்தில் நம் சமயச்சார்பினர்களும் சமயத்தின் உண்மையறியாமல் இதினின்றும் நழுவிவிடுகின்றனர். இவர்களை இந்நிலையினின்றும் நழுவாதிருக்கும்படி செய்தற்கியலாதபோது புறச்சமயிகளை நாம் எவ்வாறு வசப்படுத்தப் போகிறோம்?

ஆசேதுக ஹிமாசலாந்தமாகவுள்ள பலவிடங்களில் தத்வம் இன்னதென்றறியாத பல நவீன சமயங்கள் தோன்றி பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன. அச்சமயங்களை மேற்கொண்டொழுகுவாரும் பொருண்மிகச்செலவிட்டும் சரீரப்பிரயாசையுற்றும் அச்சமயங்களை விர்த்தி செய்துகொண்டு வருகிறார்கள். ஸர்வேசுவரன் நேரே காட்டக்கண்டவர்களாகிய பராங்குச பரகாலயதிவராதியர் அருமையாக ஆதரித்துவந்த நம் சமயத்தைப் போற்றுவார் பலரிலலாததால் இது மின்மினிபோல விளங்கிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில தர்மசிந்தனையுடைய தனவான்களும் சமயாபிவிர்த்திக்கென்றே தோன்றிய பெரியார்களும் இதனை விர்த்தி செய்தற்குத் திருவுள்ளம்பற்றிருக்கின்றனர். இவர்களை வற்புறுத்தியேனும் பொருளிட்டி ஒரு பத்து மாணாக்கர்களையாவது சிறந்த பண்டிதர்களாக்கி அவர்களைப் பலவிடங்கட்கனுப்பி ஸம்ப்ரதாயாபிவிர்த்தி செய்ய வேண்டுமென்பதுதான் நம் திவாகரத்தின் முக்ய நோக்கம்.

இந்நோக்கம் பூர்த்தியுறுதற்கறிகுறியாக இவ்வாண்டில ஆவணிமீ 4௳யன்று முன் கூட்டினின்றும் விலக்கிப் பத்திரிகையின் சொந்தமாகவே பிரிண்டிங் & பைண்டிங் ஆபீஸ் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது.

இவ்வாபீஸில் இக்காலத்திற்கு இன்றியமையாதிருக்கும் பல சிறு நூல்களையும், வெளிவெறாத பல அரிய நூல்களையும், உபயோகமாகவிருக்கும் நூல்களையும் அச்சிட்டு, சகாயமான விலைக்குக் கொடுத்துதவ வேண்டுமென்ற கருத்து பெரிதுமுண்டு. கருதிய

காரியம் கைகூடும்போது வித்யார்த்திகளாய் வருபவர்கட்கும் தினந்தோறும் சிறிது நேரம் இவ்வாபீஸில் தொழிலைப் பயிற்றுவிக்க வேண்டுமென்ற அபிப்பிராயமுமுண்டு.

நாம் கருதியவளவு ஊதியங்கிடைப்பதற்கு இவ்வாபீஸ் ஓர் கருவியாயிருக்குமேயல்லது பிறிதில்லை. ஊதியமும் எம்பெருமான் அநுக்ரஹத்தாற்கிடைக்கவேண்டும். அதையும் நம்மாலுண்டாக்கிக் கொள்ளவொண்ணாது. "ஏரியாம்வண்ணம் இயற்றுமிதுவல்லால், மாரியார்பெய்கிற்பார்மற்று" என்று பெரியார் பணித்ததும் இங்கறியத்தக்கது.

இப்பத்திரிகை தோன்றியகாலமுதல் இன்றளவும் இதனை அபிமானிகள் பலரும் ஆதரித்தால் அரியபெரிய காரியங்களைச் சாதித்து விடலாம் என்று அடிக்கடி விண்ணப்பித்துள்ளோம். அபிமானிகள் பலரும் ஆதரிக்க முன்வந்தார்களில்லை. இனியாவது ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். ஸம்ப்ரதாயாபிவிர்த்தியை முன்னிட்டுத்தோன்றிய பத்திரிகையாதலால் ஒவ்வொரு அபிமானிகளும் வருஷம் ஒன்றிற்கு இரண்டு ரூபா பத்திரிகையை உத்தேசித்துக் கொடுக்காவிட்டாலும் கைங்கரியமாகப் பாவித்தேனும் கொடுப்பதற்குக் கடமைப்பட்டவராவார்கள்.

நமது சமய உண்மையைக் காலத்துக்கேற்றவாறு சிறு நூல் வாயிலாகவும் பத்திரிகை வாயிலாகவும் பலருக்கும் வெளிப்படுத்துவதற்கு அச்சாபீஸ் இன்றியமையாதிருப்பதால் இவ்வாபீஸ் சிறப்பாகவே தொடங்கப்பெற்றுள்ளது. இவ்வாபீஸின் மிஷின் முதலிய சாமான்களின் கிரயம் ரூ. 5500 இந்த ரூபா ஐயாயிரத்தைந்நூறுள் நமக்கு மிகவும் உரிமையுடையவரிடத்தில் கடனாக வாங்கிய ரூபா 2500 இந்த ரூபா இரண்டாயிரத்தைந்நூறும் ஜீவித சந்தாதார் சந்தாதார் மற்றும் அபிமானிகள் மூலமாக விரைவில் வசூலித்துக் கொடுத்துவிடலாமென்ற ஊக்கமுமிருக்கிறது. எம்பெருமானும் அநுகூலமே தலைக்கட்டி வைப்பானாக.

வசூலிற்காக நமது ஸம்பந்தமுடையவர்கள் ஆங்காங்கு வருவார்கள். அபிமானிகளெல்லாம் அவரை ஆதரித்துத் தம்மா

லியன்றவரை வசூலித்துக்கொடுத்துபகரிப்பார்களென்று நம்புகிறோம்.

இன்னும், ஜீவித சந்தாதார்கள் மூலமாக வசூலிக்கவேண்டிய ரூ. 800 சந்தாதார்கள் மூலமாக வசூலிக்கவேண்டிய ரூ. 600 ஆக ரூ. 1400-ம் வசூலாகிவிட்டால் பெரும்பாலும் கடனை நீக்கிவிடலாம். ஆதலால் சந்தாதார்களெல்லாம் சந்தாத் தொகையைக் கொடுத்துவுதவதோடு அவரவர் தம்மாலியன்றவளவு பல சந்தாதார்களைச் சேர்ப்பித்துதவுமாறு வேண்டுகிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

கலிதருமம்.

மயித்திரேயர், பராசரபகவானை நோக்கிக் கலிதருமத்தைக் குறித்து உபதேசித்தருளவேண்டும் என்று விரும்பிக்கேட்டபோது அவர் சொல்லத் தொடங்கினார்:—

மயித்திரேயரே! எப்பொழுதும் பாஷண்டர்களின்கூட்டமிகுதியும், உத்தமர்கட்கு நலிவும், திருமாலின் ஆராதனைக்குறைவும், வேள்வி முதலிய ஸத்காரங்களின் தேய்வுமுண்டாகுமோ அப்பொழுது கொடிய கலிகாலம் வந்துற்றதென்றறிந்துகொள்ளவேண்டும். மேலும் மனிதர்கள் தத்தம் நிலைக்கும் வருணத்திற்கும் தக்கவாறு நடக்கமாட்டார்கள். இவ்வொழுக்கம் நிகழாதபோது சாஸ்திரங்களிற் குறிப்பிடப்பெற்ற யாக முதலிய நற்செயலுமுண்டாகமாட்டா. அதற்றொடு சார்ந்த விவாஹங்களும் நிகழா. வேதத்தால் யாது பயனுளது? வேதியர் எவ்வகையாலுயர்ந்தவராவார்? மனிதர்களைக்காட்டிலும் தெய்வமொன்றுண்டோ? என்று குதர்க்கம் பேசுவார்கள், காமபரவசராய் மயங்கி ஞானமற்றவர்களாய் ஸர்வலோக சரண்யனாகிய எம்பெருமானை அர்ச்சனை செய்யாமல் அன்னிய தெய்வங்களைப்பற்றி ஆராதிப்பார்கள். குருவினிடத்தில மாணாக்கன் நடந்துகொள்ளவேண்டிய முறையும், ஸ்திரீபுருஷர்கள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கமும்

அழிந்துவிடும். எக்குலத்தினனேனும் வலிமையுடையான் எவனோ அவனே அரசனாவான். எவ்வளவு புலமையனாயினும் பொருளுள்ளவனே புகழப்படுவான், கல்வியறிவொழுக்கமுள்ளவனை ஒருவனும் மதிக்கமாட்டான். சாஸ்திரங்களிற் குறிப்பிடப்பெற்ற உத்தம சமயங்களை மேற்கொள்ளாமல் தம்மிச்சைக்குத் தோன்றியதைக் கற்பித்துக்கொண்டு இதுதான் நல்ல மதம் என்று தர்க்கிப்பார்கள். அவர் தம்வாயாற்பிதற்றுகின்ற உரையெல்லாம் சாஸ்திரமாய்விடும். ஆசிரம நியமங்களும் அழிந்துபோம். அற்பப் பொருள் உள்ளவனும் தன்னைப்பொருண்மிகப் படைத்தவனாகக்கருதிக் கர்வமுறுவான். மனைவியானவள் பொருளில்லாத தன் கணவனைக் கைவிட்டுப் பொருளுடையவன் எவனாயினும் அவனையே தனக்குக் கணவனெனக்கொள்வாள். பொருளைச் சம்பாதிப்பதுதான் அறிவின் பிரயோஜனமென்பார்கள். ஆத்மஞானத்தை யடைவதை முக்கியப் பிரயோஜனமாகக் கொள்ளமாட்டார்கள். சம்பாதிக்கப்பட்ட பொருளை தர்மவழியிற் செலவிடாது தாம் வசிப்பதற்கு வீடு முதலியவை கட்டுவதிலும் டம்பமானவகைகளிலும் உபயோகிப்பார்கள். இல்லறத்தினர் விருந்தோம்பல முதலிய தர்மங்களை அடியோடு மறந்துவிடுவார்கள். பொய் முதலிய பாதகங்களைச்செய்து பொருளீட்டுவதில் மனக்களிப்புடையவராவர். சூத்திரர்கள் பிராமணர்களை மேன்மக்களென மதிக்கமாட்டார்கள். அவர்கள் மதிக்காதிருப்பதற்கு ஏதுவாக இவர்களும் ஒழுக்கமற்றவர்களாய் இருப்பார்கள்.

பால் முதலிய பலனைத் தருகின்றதென்ற புத்தியால் பசுக்களைப் பாதுகாப்பார்கள். பால்தராத வயது முற்றிவிடுமானால் அப்பசுக்களுக்கு இரைபோட்டுப்பாதுகாவாமல் அவை துன்புறும்படி செய்வார்கள். மனிதர்கள் மழையில்லாமையைப்பற்றிய அச்சமுள்ளவர்களாய்ப் பசிக்குப் பயந்து மேகத்தையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். மேலும் பசிப்பிணியால் வாட்டமுற்றுத் தங்களைத் தாங்களேகொலை செய்துகொள்ளுவார்கள். கொடிய பஞ்சத்தால் பலவகைத் துன்பங்களையும் அனுபவித்துச் சிறிதும் சுகமற்றவர்களாய் வாழ்வார்கள். பிண்டோதக தான ரூபமான பிதுரர் பூஜைகளும் நடைபெறா.

அறிவொழுக்கங்களிற் சிறந்த பரமபாகவதர்களைக் கண்டும், அவர் உரைக்கின்ற உரையினைக் கேட்டும், பீதகவாடைப்பிரான் பெருமையை வாக்கினாற் செப்பியும், அவனைத் திருவாராதனை செய்தும், அவன்றன்னைப் பரதேவதையாக நினைக்க மயங்குவார்கள். வேதநெறிப்படி ஒழுகுகின்ற மாந்தர்களைக் கொடியோர்கள் துர்வாதத்தால் அவர்களுடைய புத்தியையும் மாற்றிக் கெடுத்துவிடுவார்கள். விரதமுதலியவைகளையெல்லாம் விட்டுத்தேகத்தையே வளர்த்துத்திரிவார்கள்.

கலியினால் ஒருகூறு தர்மமும், முக்கூர் அதர்மமும் விரவி நடைபெறும். கலியினிறுதியில் காற்கூறு தர்மமும் அழிந்து பாபமே வளரும். தேவதையையும் குருவையும் மந்த்ரத்தையும் மெய்யாகக் கருதப்படமாட்டார்கள். வைதீக ஒழுக்கத்தைக் கைப்பற்றி யிருந்தாலும், ஸ்ரீய:பதியைப் பரதேவதையாகப் பாவனை செய்யாதவர்களாகி அவப்பொருளையே பரம்பொருளாக நினைப்பார்கள். வேதாந்தத்தின் ஆராய்ச்சியாற் பிறக்கும் பெருஞ்ஞானம் மாந்தர்க்குண்டாவதரிது. சிறந்தஞானியர்க்கல்லது நாராயணன் உபாசனை உண்டாகமாட்டா. உக்கிரதேவதையையே பரதேவதையாக மதித்து உபாசிப்பார்கள். மாந்தர்க்குச் சாத்விக குணம் குறைந்து தாமதகுணம் மிகும். ஸ்திரிகளும் அளவற்ற ஆசையுடன் குறுகியும் உடம்பையுடையவர்களாய்ப் பேருணவையுண்டு, மிகுந்த பிள்ளைகளைப் பெற்றுச் செல்வமற்றவர்களாயிருப்பார்கள். மேலும் இவர்கள் இரண்டு கைகளாலும் தலையைச் சொறிந்துகொண்டு, தம பர்த்தா முதலானவர்களின் கட்டளையை மறுத்துவிடுவார்கள். தேகசுத்தியில்லாமல் தம்மைப் போஷித்துக் கொள்வதிலேயே கருத்துற்றுப் பொய்பேசித்திரிவார்கள். தீய ஒழுக்கமுடையவர்களிடத்திற் சிநேகமுடையவராய்த் தம் புருஷர்களுக்குத் தீங்கைச் செய்வார்கள்.

பிரமசாரிகள் விரதானுட்டான மில்லாமல் வேதாத்யயனம் செய்வார்கள். இல்லறத்தினர் ஓமம் செய்தல், தக்கார்க்குப் பொருளை யீதல் முதலிய நற்காரியங்களைச் செய்யமாட்டார்கள். வானப்பிரஸ்தகரும நிலைக்கேற்ற ஒழுக்கமற்றவர்களாய் ஊரிலுள்ள

வைகளைப் புசித்துத் திரிவார்கள். சந்நியாசிகள் புத்திர மித்திரர்களிடத்து அன்புடையவர்களாயும், பொருளாசையுற்றவர்களாயும், தம்வேசத்தால் பிறரை மயக்கிக்கொண்டு திரிவார்கள்.

அரசர்கள் ஜனங்களைப் பரிபாலனம் செய்வதையே முக்கிய தர்மமாகக் கொள்ளாமல் பகுதிப்பணத்தை மிகுத்துப் பலாத்காரமாக வசூல்செய்வார்கள். வைசியர்கள் வாணிகம் செய்தல் பயிரிடுதல் முதலியதொழிலைவிட்டு, சூத்திரர்கள்தொழிலைச் செய்துபிழைப்பார்கள். சூத்திரர்கள் சந்யாசிவேஷம்பூண்டு பிக்ஷைவாங்கியுண்பார்கள். ஜனங்கள் பஞ்சத்தினாலும், வயிற்றுப் பசியாலும் துன்பமுற்றவர்களாய்க் கோதும்பை முதலிய தானியம் விளையப்பெற்ற நீசப் பிரதேசத்திற்குப் போய் விடுவார்கள். அரசர்களுடைய குற்றத்தினால ஜனங்கள் சாஸ்திர விரோதமான காரியங்களைச் செய்து பாலியத்திலே மரணம் அடைவார்கள். பெண்கள் ஏழுவயதுக்குள் பிள்ளைகளைப் பெற்று விடுவார்கள். ஆண்மக்கள் ஒன்பது வயதுக்குள் பிள்ளைகளை உண்டாக்கும் திறமையுடையவர்களாவார்கள். பன்னிரண்டு வயதுக்குள் நரை முதலியவைகள் உண்டாகும். கலி முதிர்ச்சியில் ஒருவனும் இருபதுவயதுக்கு மேல் பிழைத்திருக்க மாட்டான். ஜனங்கள் அற்ப அறிவுடையவர்களாய் வீணான தவவேடங்களை மேற்கொண்டு நசித்துப்போவார்கள்.

“நிலமெலாம்விளைவுகுறைந்திடும்கடையர்நீசரேதலைமையாய்நிற்பார்
அலகிலாமருந்தும்பலித்திடாவரசரறந்தவிர்ந்தரும்பொருள்வெஃகும்,
புலமைசேர்மறையோர்நிட்டையைமறந்துபுன்றொழிலேபுரிந்திடுவார்
வலிமைசொன்மடவார்கண்வரைப்பேணார்மைந்தருந்தந்தையைமதியா

“மன்னவர்தாமேகள்வராய்க்கவர்வர்வனிதையரசத்தியாய்வாழ்வார்
மின்னுதனமட்டேமழையுலகுக்குவிளைவெலாம்விபலமேயாகும்
பன்னியபலதானியங்களுமணுவைப்பற்றவுஞ்சிறியபான்மையவாம்
இன்னனவானகலியுகாந்தத்தில் . . . . . ”.

என்று இங்ஙனம் கூறிய இவையன்றி நியாயசபையில் கபடமே மொழிந்து, அதர்மங்களைத் தர்மமாகத் தாபிப்பார்கள். சாத்விக சாஸ்திரங்கள் குறைந்து மோஹன நூல்களும், வஞ்சகநூல்களும் ஒன்று நூறாகி வளர்ந்திடும். வேதங்களெல்லாம் மாய்ந்து ஓங்காரத்தில் லயமாகும். வேதமொழுக்க முடையார்க்குத் தீங்குநேரிடும்

தர்மபுத்தி யுடையவர்களின் பிரயத்தனங்க ளெல்லாம் வறிதே ஒழியும். மனிதர்கள் பாஷண்ட புத்தியுடையவர்களாய்த் தெய்வங்களாலும், வேதங்களாலும், பிராமணர்களாலும் என்ன பிரயோஜன முண்டென்று பிதற்றுவார்கள். தண்ணீரைவிட்டுக் கழுவுவதால் என்ன சுத்தியுண்டாய் விடும் என்பார்கள். தானியங்களெல்லாம் அணுக்கள் போலாகும். ஜனங்களுக்கு, மாமனார் மாமியார் ஆசாரியர் மைத்துனர், மனைவியர்கள் வேண்டிய தொகையுடையவர்களாயிருப்பார்கள். மாதா பிதாக்களிடத்து அன்பில்லாதவர்களாய் மாமியார் மாமனார்களையே முக்கியமாய் அநுசரித்து வருவார்கள் தாய்யார்? தகப்பன்யார்? எவனுக்கு எவன்? அவ்வவன் தன் கருமத்தை யல்லவோ அநுசரித்திருக்கிறான் என்று பேசிக்கொள்வார்கள். மனம் வாக்குக் காயம என்ற திரிகரண சுத்தமற்றவர்களாய்த் தினந்தோறும் பாவத்தையே செய்து வருவார்கள். சுத்தியில்லாதவர்க்கும், சௌசமில்லாதவர்க்கும் வெட்கமில்லாதவர்க்கும் எந்தெந்த துக்கங்கள் உண்டாகுமோ அவையெல்லாம் மாந்தர்க்கு உண்டாகும்.

இத்தகைய கொடிய கலிகாலத்தில எவனுயினும் ஒருவன் அற்பமான தர்மஞ் செய்வானேல் அவன் கிருதயுகத்தில் பெருந்தவம் செய்வதனால எவ்வளவு புண்ணியத்தை அடைவானோ அவ்வளவு புண்ணியததை அடைவான். சர்வலோக சரண்யனாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய மெய்யடியார்களிடத்தில் கொடியகலி தோஷம் வந்து அடையமாட்டாது.

ஸ்ரீ:

"பராசரர், மயித்திரேயரை நோக்கி மயித்திரேயரே! இந்தக் கொடிய கலியிலும் ஒரு விசேஷம் உண்டென்று என் புதல்வராகிய வியாசர் கூறியிருக்கின்றனர். அதையும் உமக்குச்சொல்லுகின்றேன்:—

ஒருகாலத்தில்ரிஷிகள் குழுமியிருந்தனர். அப்பொழுது அவர்களுக்குள் புண்ணிய சம்பந்தமான வாதம் உண்டாயின. அவைஎக்காலத்து அறம் சிறிது செய்தாலும் மிகுந்த பலனைக்கொடுக்கும். எவா எத்தகைய தர்மத்தை எளிதிற் செய்தற்குரியர் என்பன.

மகரிஷிகள் இவற்றின் உண்மை தெரியவேண்டுமென்று வேத வியாசர் இருப்பிடம் சென்றனர். அவர் அங்கு நீராடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது மகரிஷிகள் நதிக்கரையில் மரங்களடர்ந்திருந்த ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அதுசமயம கங்கா தீர்த்தத்தில் முழுகிக்கொண்டிருந்த என்குமாரராகிய வியாசர் எழுந்து சூத்திரன் சாது, 'கலிசாது' என்று அவர்கள் செவியில் கேட்கும்படி சொல்லி மறு முறையும் நீரில் மூழ்கி யெழுந்து 'சாது சாதுசூத்திரனே! நீ மகாபுண்ணியவானாய் இருக்கிறாய்' என்று உரைத்தனர். மீண்டும் நீரில் மூழ்கி, "பெண்கள் மிகவும் புண்ணியவதிகள்; அவரினும் புண்ணியமுடையவர் யார்?" என்றனர். அதன் மேல் நீராடி ஆசமனாதி சகல அநுஷ்டானங்களுஞ் செய்து வீற்றிருந்தனர். அப்பொழுது முனிவர்கள் அவரை வந்தனஞ் செய்தனர். வியாசர் ஆசனங்கொடுத்து 'இங்கு வந்த காரியம் யாது?' என்று வினவினர். முனிவர்கள் சுவாமி!! தேவரீரிடத்தில சந்தேகம் தீர்த்துக்கொள்ளவந்தோம்; இஃதொருபுறமிருக்க, தேவரீர் நீரில் முழுகி எழுந்திருக்கும் போதெல்லாம் கலி சாது என்றும், சூத்திரன் சாது என்றும்; பெண்கள் ஸாதுக்கள் என்றும், அவர்களெல்லாம்புண்ணியவான்களென்றும் அருளிச் செய்தீரே; அதன் கருத்தை முன்னறிய விரும்புகிறோமென்றனர்.

இதனைக் கேட்ட வியாசர் புன்முறுவல் கொண்டு சொல்லத் தொடங்கினார்:—

ரிஷிகளே! கிருதயுகத்தில் எத்தகைய புண்ணியம் பத்து வருஷங்களில் ஸித்திக்குமோ அத்தகைய புண்ணியம் த்ரேதாயுகத்தில் ஒரு வருஷத்தில் கிடைக்கும். துவாபரயுகத்தில் ஒரு மாதத்திற் பெறலாம். கலியுகத்தில் ஒரு நாளிற் கிடைக்கும். பலன் ஸித்திப்பதில் மற்ற மூன்று யுகங்களைக் காட்டிலும் கலியுகத்தில் சீக்கிரங் கிடைப்பதால் கலி ஸாது என்று சொன்னேன். மேலும் சொல்லுகிறேன் கேளுங்கள் கிருதயுகத்தில் யோகநிலையிலிருந்து தியானஞ் செய்வதனாலும், த்ரேதாயுகத்தில் யாகஞ்செய்வதனாலும், துவாபரயுகத்தில் அர்ச்சிப்பதனாலும் எந்தப்பலன்களுண்டோ அந்தப்பலன் கலியுகத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய திருநாம ஸங்கீர்த்தனஞ் செய்வதனாலுண்டாகும். கலியில் சிறிது சிரமத்தினால் மிகுந்த தருமத்தையடைவார்களாதலால் கலியை நான் கொண்டாடுகிறேன்.

இனி, சூத்திரன் ஸாது என்று சொன்னதன் விவரத்தையுங் கேட்பீர். பிராமணர் முதலானவர்கள் விரதாநுஷ்டானந் தவறாதிருந்துகொண்டு முன்னர் வேதாத்யயனஞ்செய்ய வேண்டும். பின்னவர் அறத்தியலான் சம்பாதிக்கப்பட்ட திரவியங்களைக்கொண்டு யாகஞ்செய்யவேண்டும். இவர்கள் பகவத் விஷயமான சொல்லைத் தவிர வீணான வார்த்தைகளைப் பேசலாகாது. எம்பெருமானுக்குச் சமர்ப்பியாத அன்னத்தைப் புஜிப்பதும், டம்பத்திற்கும் லாபத்திற்கும் யாகத்தைச் செய்வதும் பாதகமாகுமாதலால் இவர்கள் எப்பொழுதும் மனம் வாக்குக் காயங்களை ஒருவழிப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். எந்தக்காரியத்தையும் சாஸ்திரத்தில் விதித்தபடி செய்யாவிடின் இவர்களுக்குப் பெருங் குற்றமாம். இங்ஙனம் இவர்கள் மறுமைப்பலனையடைவதற்கு இம்மையில் படாதபாடு படவேண்டும். சூத்திரனுக்கு இத்தகைய கஷ்டமொன்றுமில்லை. பிராம்மணர்கட்குப் பணிவிடை செய்கிறதொன்றினால் அவர்களடைகின்ற உத்தமமான லோகத்தை யடைவான். ஆதலால் இவனினும் புண்ணியவான் வேறு எவனிருக்கின்றனன்? இப்படி எளிதிற் பயனடைகின்ற காரணத்தான் சூத்திரன் ஸாது என்றேன்.

பெண்கள் ஸாதுக்களென்று சொன்ன காரணத்தையும் சொல்லுகிறேன். புருஷர்கள் சத்பாத்திரங்களில் செலவிடுவதற்காக நல்வழியில் பொருளை யீட்டவேண்டும். ஈட்டியபொருளைப் பாதுகாத்து, அதனை "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல தானென்றாங்கு, ஐம்புலத்தாறோம்பல்தலை" என்றபடி பிதுரர் முதலானோர்கட்குச் செலவிடவேண்டும். இப்படி பல வகையாலும் பிரயாசைப்பட்டு ஸத்கர்மங்களைச் செய்வதால் ஆடவர்கள் பிரஜாபதி முதலிய லோகங்களை யடைந்து இன்புறுவார்கள். பெண்கள் மனோவாக்குக் காயங்களால் தம் பர்த்தாக்களுக்கு அநுகூலராயிருந்து பணிவிடை செய்து வருவார்களாகில் அவர்களடையும் லோகங்களை எளிதிலடைவார்கள். ஆதலால் ஸ்திரீகள் ஸாதுக்கள் என்று சொன்னேன். இனி, நீங்கள் என்னைக்கேட்கவேண்டுமென்று நினைந்து வந்திருக்கின்ற அதனைக் கேட்பீராக; என்றனர். முனிவர்கள் வியாசரை நோக்கி 'நாங்கள் கேட்டுத்தெளியவேண்டுமென்று கருதிய அர்த்தங்கள் தேவரீர் அருளிச்செய்தவற்றுளடங்கியுள்ளன. இனிக் கேட்கவேண்டுமென்பதொன்றில்லை; என்றனர்.

அதன்மேல் வியாசர் புன்முறுவல்கொண்டு முனிவர்களை நோக்கி, 'நான் திவ்யஞ்ஞானத்தினால் நீங்கள் கருதியவற்றைநினைத்து கலிசாது, சூத்திரன் சாது, ஸ்திரீசாது' என்றுரைத்தேன். அற்பமான பிரயத்தனத்தால் கலியிற் சிறந்த பலன் கிடைக்கிறது. சூத்திரர்களும் பெண்களும் முறையே மேன்மக்கட்குச்செய்யும் தொண்டாலும், பர்த்தாக்கட்குச் செய்யும் பணிவிடையாலும் உத்தமலோகங்களை அடைகிறார்கள். ஆதலால் இம்மூவரும் புண்ணியசாலிகளென்பது எனது கருத்தென்றனர். முனிவர்கள் களிப்புற்று வியாசரின் அடியில் வீழ்ந்து வணங்கித் தம்மிருப்பிடஞ் சென்றார்.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

வேதம்.

வேதம் என்ற சொல் வித் என்னும் தாதுவினடியாகப் பிறந்தது. "வேத யதீதி வேத:" அறிவிக்கின்றமையால் வேதமென்னும் பெயர் பெற்றது. இன்னும் "விதந்தி யநேந தர்மாதர்ம விதிவேத:" இதன் துணையினால் தர்மாதர்மங்களை அறிகிறார்களாகையால் இப்பெயர் பெற்றதெனவுஞ் சொல்வார்கள். மேலும் இதற்கு சுருதி, ஆம்நாயம் முதலிய பெயர்களும் வழங்குவதுண்டு. இப்பெயர்கட்கு முறையே கேட்கப்படுவதென்றும், பரம்பரையாகப் பயிலப்படுவதென்றும் பொருளாம். இந்த வேதம் ஒருவராலும் செய்யப்படாத அநாதிசித்தமானது. சங்கர மத்வ ராமாநுஜாசாரியார்களென்ற மதாசாரியர் மூவர்களும் இஃதநாதிசித்த மென்பதில் உடன்பாடுடையர்.

வேதத்தில் கர்மகாண்டம், உபாசநாகாண்டம், ஞானகாண்டமென்ற மூன்று பிரிவுகள் உள்ளன. இவற்றுள் கர்மகாண்டத்தில் நல்லொழுக்க முறைகளையும், அவற்றைச் செய்வதினாலுண்டாகும் பலன்களையும் அறிவிக்கும். உபாசநாகாண்டத்தில் ஈசுவரனிடத்துப் பக்தி செய்யும் முறைகளையும் பலன்களையும் கூறும். ஞானகாண்டத்தில் பிரமஞானத்தை அடையும் இயல்புகளையும் பலன்களையும் உரைக்கும்.

இன்னும் வேதத்தில் பிராம்மணம் மந்திரமென்ற பிரிவுகளுமுண்டு. அநுஷ்டிக்கவேண்டிய விதிகளைக் குறிப்பிடுவது பிராம்மணம். மந்திரம்-ஸ்தோத்திரம். இவையல்லாமலும் ஆரண்யகங்கள் என்ற பாகங்களும் உண்டு. இவ்வாரண்யகங்கள் பெரும்பாலும் தத்வஞானத்தைக் குறிப்பிடும். உபநிஷத்துக்களும், ஸூத்ரங்களும் இதிற் பொதிந்துள்ளன. இங்ஙனம் வேதத்தில் கர்மகாண்ட, உபாஸநாகாண்ட, ஞானகாண்டத்தொகுதிகளும், பிராம்மணம் மந்திரம ஆரண்யம் உபநிஷத் ஸூத்ர முதலிய பகுதிகளும் விரவிக்கிடந்தன.

இவற்றைப் பகுத்துணர்ந்து பொருண்முடிவு செய்வார் அரியரா யினர். பராசரமுனிவரின் அருமைப் புதல்வராகிய பாதராயணர் விரவிக்கிடந்த வேதத்தை ருக் யஜுர் சாமம் அதர்வணம் என்று நான்கு வகையாகப் பிரித்தார். ருக் என்பது [ரிக்-துதித்தல்.] பரமாத்மாவை ஸங்கீதப் பிரார்த்தனையினால் கொண்டாடும் வாக்யங்களையுடையதாயிருக்கும். யஜுர் யாஜ் என்னும் பகுதியடியாகப் பிறந்தது. யாஜ்-யாகம், பலி. இதில் யாகம், தானம், பலி முதலிய சடங்குகளைச் செய்யும் முறைகளும், புரோகிதர்கள் அநுஸந்தித்துச்செய்யும் கர்மவிதிகளும் இவற்றிற்கு ஆதாரங்களும் உரைக்கப் படுகின்றன. சாமம் கானரூபமாயிருப்பது. அதர்வணத்தில் சத்துரு நாசத்தினிமித்தம் செய்யப்படும் ஹோமாதி விதிகளும், வேறு பல மந்திரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

உத்தங்கர்.

உத்தங்கரென்பவர் பைதரென்னும் மஹரிஷியின் சிஷ்யர்களி லொருவர். இவர் தம்மாசாரியரான பைதருக்கு நெடுநாள் பணி விடைசெய்து சாஸ்திரங்களின் நுண்ணிய பொருளெல்லாம் தெளி வாக நன்கு பயின்றனர். ஒருநாள் இவர் ஆசாரியரை நோக்கி 'ஸ்வாமி! தேவரீரிடத்தில் எல்லா அர்த்தவிசேஷங்களையுங்கேட் டுணர்ந்ததால் தேவரீர் இச்சித்தபொருளைத் தக்ஷிணையாகக் கொடுக்க விரும்புகிறேன்; நியமித்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அப்பொழுது பைதர் தம்முடைய பத்தினியைக் கேட்கும்படி கட்டளையிட்டனர். அவ்வாறே சென்று கேட்டனர். அப்பொழுது அவள் 'பௌஷ்யராஜாவின் பத்தினி யணிந்திருக்கிற குண்டலங் களை வாங்கிக் கொண்டுவா; இன்று தொடங்கி நான்காவது தினத் தில் அவற்றைத் தரித்துக்கொண்டு பாகவதாராதனை செய்ய வேண்டியிருத்தலால் விரைவில்கொண்டுவந்து கொடுப்பாய்' என்றனள். உத்தங்கரும் அப்படியிசைந்து 'எவ்வாறேனும் கொணர்ந்து கொடுக்க வேண்டும்' என்று உறுதிகொண்டு புறப்பட்டுச்சென்று பௌஷ்ய ராஜனைக்கண்டனர். அரசனும் இவரை உபசரித்து நல்வரவேற்றுத் 'தேவரீர் இங்கு எழுந்தருள்வதற்குக் காரணம் யாது?' என்று

வினவினான். இவர், 'உம்முடைய பட்டமஹிஷி யணிந்திருக்கின்ற குண்டலங்களைத் தரித்துக்கொண்டு பாகவதாராதனஞ் செய்ய வேண்டுமென்று என்னுடைய ஆசார்யரின் பத்நியார் விரும்பினார்; அவ்விருப்பத்தை நிறைவேற்றுதற்காக உம்மையடைந்தேன்' என றனர். இதனைக்கேட்ட அரசன் இவரை நோக்கி 'ஸ்வாமீ! தேவரீரே என் மனைவியிடஞ் சென்று கேட்டுப் பெற்றுக்கொள்வீர்' என்றனன்.

இவ்வுரையினைக்கேட்ட உத்தங்கர் அரசன் மனைவியிடத்திற் செல்லலுற்றனர். அரசன் மனைவி சுத்தமில்லாதவர் கண்ணிற்குப் புலப்படமாட்டாள் என்பதறிந்த இவர் மிகவும் பரிசுத்தராகச் சென்றனர். அவள் இவரைக்கண்டு வந்தனை வழிபாடு செய்து தேவரீர் இவ்விருக்கைக்கு வருவதற்குக் காரணமென்ன? என்று தாழ்மையுடன் வினவினள். இவரும் தம் மனக்கருத்தைத் தெரிவித்துக் குண்டலங்களைத் தரல் வேண்டும் என்றனர். அவளும் இவரது பெருந்தகைமையை நினைத்து, 'ஸத்பாத்திரத்திற் கொடுத்துதவுவது கடமையாகும்' என்று தீர்மானித்துக் குண்டலங்களைக் கொடுத்தனள். உத்தங்கர் 'நாம் கருதிவந்த காரியம் இனிது நிறைவேறியது' என்று மிக்களிப்புற்றுக் குண்டலங்களைப் பெற்றுச் செல்லலுற்றார். அப்பொழுது அவள் இவரை நோக்கி 'ஸ்வாமீ! இந்தக் காதணி நாகரத்னத்தாற் செய்யப்பட்டன; ஒரு முனிவர் எனக்குக் கொடுத்தனர்; தக்ஷகன் இவற்றைக் கவரவேண்டுமென்ற விருப்பமுடையவனாகவிருக்கிறான்; ஆதலால் மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக்கொண்டு செல்வீர்' என்றனள். அவரும் புறப்பட்டுச் சென்றுகொண்டிருக்கையில் ஓர் தடாகக்கரையில் அக்குண்டலங்களை வைத்துவிட்டு அத்தடாகத்திலிறங்கி நீராடிக்கொண்டிருந்தனர். 'இதுவே நல்ல தருணம்' எனக் கருதிய தக்ஷகன் அக்குண்டலங்களைக் கவர்ந்துகொண்டு பாதாளஞ் சென்றனன். இவரும் அவனைப்பின்பற்றிப் பிலத்தின் வழியாகச் செல்ல முயன்றனர்.

அப்பொழுது இவர் ஆசார்யரின் உயிர்த்துணைவனான இந்திரன் அநுக்ரஹத்தால் இவர் கையகத்து வச்சிராயுதம் வந்து சேர்ந்தது. அதன் உதவியால் பூமியைப் பேதித்துப் பாதாளலோகஞ்

சென்றனர். அங்கு ஒரு குதிரையின் சமீபத்தில் ஒரு மஹாபுருஷ னிருக்கக்கண்டு, அவனைத் துதித்தனர். அந்த மஹாபுருஷன் இவரை நோக்கி 'நீர் இந்தக் குதிரையின் காதில் ஊதுவீரேல் தக்ஷகன் உமக்கு வசப்படுவான்' என்றனன். இவரும் அவ்வாறே குதிரையின் காதிலூத உடனே புகையும் நெருப்பும் பாதாள லோகத்தைச் சூழ்ந்துகொண்டன. இந்நிலைமைகண்டு தக்ஷகன் அச்சமுற்றுக் குண்டலங்களை இவரிடங்கொடுத்துச் சென்றனன். இவரும் களிபேருவகையடைந்து சிந்திக்கலுற்றார். 'இன்று நம் மாசார்ய பத்னி நியமித்த நான்காவது தினமாயிற்றே; பல காதவழி கடந்து செல்லவேண்டுமே; என் செய்வது' என்று வருந்தினர். இவரது மனநிலையறிந்த அந்த மஹாபுருஷன் 'நீவிர் வருந்த வேண்டா; இந்தக் குதிரையின்மீதேறிச்செல்வீர். உம்மை விரைவிற் கொண்டு சேர்த்துவிடும்' என்றனன். இவரும் அவ்வாறே குதிரையி னாரோகணித்துத் தம்மாசார்ய பத்னியிடம் குண்டலங்களை ஸமர்ப் பித்து ஆசார்யனிடம் விடைபெற்று ஹஸ்தினபுரியை யடைந்து ஜனமேஜயனைக் கண்டனர். அரசனும் இவரை உபசரித்து வந்த செய்தியை வினவியபோது இவர் அவனை நோக்கி, 'உன் பிதாவா கிய பரீக்ஷித்தைக்கொன்ற தக்ஷகனைக் கொல்ல ஸர்ப்பயாகஞ்செய் யும்படி தூண்டி. அந்த யாகத்திற்கு ருத்விக்காக விருந்தார்.

உத்தாலகர் உபதேசம்.

உத்தாலகர் தம் புத்திரராகிய சுவேதகேதுவை நோக்கி ஆல மரத்தின் விதையைக்கொண்டுவா என்று கட்டளையிட்டார். சுவேத கேது அதனைக் கொணர்ந்தனர். உத்தாலகர் அதனையுடை என்றார். அவரும் அப்படியே செய்தார். அதன்மேல் உத்தாலகர் அதில் என்ன காணப்படுகிறதென்றார். அதற்கவர் அதில் சிறிய விதை காணப்படுகிறதென்று மறுமொழி பகர்ந்தனர். உத்தாலகர் அந்த விதையையும் உடை என்றார். அவர் உடைத்ததன்மேல் அதில் என்ன காணப்படுகிறதென்று கேட்டார். அதில் ஒன்றுமில்லை யென்றனர். உத்தாலகர் அப்பா! அதிலொருபொருளுங் காணப்பட வில்லையா? அதில் ஒரு ஆலவிருக்ஷமிருக்கிறது. அதனை நன்றாய்

ஆராய்வாய். ஸூக்ஷ்மமான அந்த விதையில் மிகப்பெரிய விருக்ஷ மடங்கியிருப்பதுபோல பரமாத்மாவினிடத்திலே எல்லா மடங்கி யிருக்கின்றன. அத்தகைய பரமாத்மாவே ஸத்யம். நீ அதுவாகிறாய் என்றனர். இங்கு, ஆலமரத்தின் பழம் ஜடப்பொருளாகிய ப்ரக்ருதிக்கும் அதிலிருக்கிற விதை ஜீவாத்மாவிற்கும் அந்த விதைக் குள்ளிருக்கிற நுண்ணியவிதை பரமாத்மாவிற்கும் உதாரணமாகக் கொள்க. ப்ரகிருதி ஆத்மா பரமாத்மாவென்ற மூன்று தத்வங்களைக் காட்டிலும் பிறிதோர் பொருளில்லையென்பதும், இந்த மூன்று வஸ்துக்களுள்ளுள் பரமாத்மாவே மற்ற இரண்டு பொருளிற்கும் ஆதாரமாகவிருப்பவனென்பதும் விளங்குகின்றன,

இதுநிற்க; நீ அதுவாகிறாய் என்பதிலுள்ள நீ என்பது அந்தர் யாமியான பரமாத்மாவையும், அதுவாகிறாய் என்பது ஜீவசரீர விசிஷ்ட பரமாத்மாவையு முணர்த்தும். ஜீவப்ரம்ம ஐக்யத்தைக் குறிப்பிடாது. ஏனென்றால்; முன்பு உத்தாலகர் சுவேதகேதுவை நோக்கி எதை யறிந்தால் எல்லா மறிந்ததாகுமோ, அதனை யறிந் தனையா? என்று கேள்விகேட்டு அதை நிரூபிப்பதற்காக, பிரம்மத் தைக்காட்டிலும் வேறான எல்லாவற்றுக்கும் பிரம்மமே காரண மாகுமென்றாரம்பித்தது, பின்னர் சேதனாசேதனங்களையும் அந்தப்பிரம்மத்திற்குச் சரீரமென்றும், பிரம்மம் ஜகத்துக்கு ஆத்மா வென்று முரைத்தனர். அதன்பிறகே நீ அதுவாகிறாய் என்றனர். இப்பொருளை நன்கு விளக்குவதற்காகவே இங்கு ஆலம்விதை உதாரணமாக வெடுத்துரைக்கப்பட்டது. இதனால் சந்தர்ப்பத்தை நோக்கினால் நீ அதுவாகிறாய் என்பதற்கு சுவேதகேதுவின் ஆத்ம சரீர விசிஷ்ட பரமாத்மாவென்ற பொருள் கொள்ளத்தக்கது வென்பது விளங்கும்.

ஸ்ரீ:

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(ஏழாம் தொகுதியின் -ம் பக்கத்தொடர்ச்சி.)

ததாகதாம் தாம்வ்யதிதாமநிந்திதாம் வ்யபேதஹர்ஷாம் பரிதீநமாநஸாம், சுபாம் நிமித்தாநி சுபாநி பேஜிரே நரம் ஸ்ரியா ஜுஷ்டமிவோபஜீவிந:" "ததாகதாம் தாம்வ்யதிதாமநிந்திதாம் வ்யபேதஹர்ஷாம் பரிதீநமாநஸாம், சுபாம் நிமித்தாநி சுபாநி பேஜிரே நரம் ஸ்ரியா ஜுஷ்டமிவோபஜீவிந:" என்று பிராட்டி நிலையை ரிஷி பேசினார். இதற்கு உலகாரியன் திருவாய்மொழி ஆறாம்பத்தில் இரண்டாந் திருவாய்மொழி 'மின்னிடைமடவார்' ப்ரவேசத்தில் அருளிச்செய்த வ்யாக்யானம் வருமாறு.—

"ததாகதாம் "ரஹஸ்யஞ்ச ப்ரகாசஞ்ச" என்று கொண்டு பிராட்டியின் ப்ரஸாதத்தாலே யுள்ளபடியெல்லாம் தோற்றக்கடவதாகப் பெற்றுடையவனை ரிஷிக்குப் பாசுரமிட்டுச் சொல்ல வொண்ணாதிருக்கிறபடி. தாம்-தர்மிக்குமேற்பட அவ்வருகொன்றின்றிக்கேயிருக்கை. வ்யதிதாம் கீழ்ச்சொன்னவை ப்ரக்ருதியாய் வ்யஸநமுள்ளது மேலே என்று தோற்றும்படியாயிருந்தாள். ஸமா த்வாதச தத்ராஹம்" என்று பன்னிரண்டாண்டு கலந்து பிரிந்த இவளுக்கு ஒன்றுந்தோற்றாதே, துக்கத்தையிட்டு நிரூபிக்கவேண்டும் படியிருந்தாள். இப்படியிராதவன்று நிந்திதையே யாகாதே. 'வ்யபேதஹர்ஷாம்' ஹர்ஷம் குடிபுகுந்து போயிற்று என்று தெரியாதா யிருக்கை. 'பரிதீநமாநஸாம்' ஹர்ஷம் வந்தாலும் ஆச்ரயமின்றிக்கே யிருக்கை. 'சுபாம்' மண் தின்றுவந்த நகடுபோலன்றிறே குணாதிக விஷயத்தைப் பிரிந்தாலிருக்கிறபடி. கடலேறி வடிந்தாப்போலே யிருக்கிற அவ்விருப்புத் தனக்கே ஆலத்தி வழிக்கவேண்டும்படி யிருக்கை. 'நிமித்தாநி சுபாநி பேஜிரே' நிமித்தங்களானவை இத்தலை

க்கு நன்மை சொல்லித் தந்தாம் ஸ்வரூபம் பெற்றன. என்போல வென்னில்; அர்த்திகளாயிருப்பார் உதாரர் பக்கலிலே சென்று தந்தாம் ப்ரயோஜநம் பெற்று ஹ்ருஷ்டராமாப்போலே. இப்படி யிருந்தன நிமித்தங்களினளவு" என்பன.

இங்கு நம்பிள்ளை யருளிச்செய்த வியாக்யானத்தில் திருஷ்டாந்தபலத்தாலும் "பஜஸேவாயாம்" என்கிற தாதுபலத்தாலும் 'பேஜிரே' என்னுமது உபாஸநம் செய்தன என்கிற அர்த்தத்தைக் காட்டுகிறபடியாலும், அதனை "க்ருபாம்ப்ராப்ய நிமித்தாநி க்ருபாநி சுபத்வாநி பேஜிரே" என்று திருஷ்டாந்தபலத்தால "ப்ராப்ய" என்று அத்யாஹாரத்தையும், 'சுபாநி' என்பதற்கு 'சுபத்வாநி' என்கிற பாவார்த்தத்தையும்கொண்டு நிமித்தங்கள் தந்தாம ஸ்வரூபம் பெற்றன என்றது. இதில ஆராயவேணடிய விஷயமுண்டு.— 'வ்யதிதாம்' என்பதுக்குத் துக்கத்தையிட்டு நிருபிக்குமபடியிருந்தாள் என்று சொல்லிவைத்து அநந்தரம் 'அநிந்திதாம்' என்பதற்கு அத்தலையைப்பிரிந்தால இருக்ககடவபடியே இருந்தாள்; இப்படி யிராதவன்று நிந்தியையாகாளே என்று அருளிச்செய்தார். அதாவது விச்லேஷத்தில் வ்யதையில்லாதிருந்தால நிந்திதையாவள் என்று கருத்து. வ்யபேதஹர்ஷாம் ஹர்ஷம் (சந்தோஷம்) குடி புகுந்து போயிற்று என்று தெரியாததாயிருக்கை. விச்லேஷத்தில் ஹர்ஷமுண்டாம்போது நிந்தை நிச்சயமாக உண்டாகக்கூடியதாகையாலும், மத்யமணி ந்யாயேந இரண்டிடத்திலும் அந்வயிக்கலாம்படி இரண்டுக்கு நடுவே அநிந்திதாம் என்று கிடக்கையாலும், இங்கும் கீழ்க்குறிப்பிட்டபடி விச்லேஷத்தில் ஹர்ஷம் உள்ளதாகில் நிந்திதையாவளென்று கருத்தாகக்கொள்ள வேண்டும்.

ஆகப் பெருமாளைப் பிரிந்து பிராட்டி ஸந்தோஷத்தை இழந்து துக்கத்துடனிருந்தாள். அப்படியிருந்தபடியால் பிராட்டி நிந்தைக்கு விஷயமாகாதிருந்தாள் என்று பொருளாகிறது. இப்படி முகப்பிலே தோற்றும் பொருளையே பொருளாகக்கொள்ளில்; பெருமாளுடைய விச்லேஷத்தில் பிராட்டிக்குத் துக்கமில்லாமைக்கும் சந்தோஷமுண்டாவதுக்கும் ஒரு ப்ரஸக்தியை நெஞ்சிற்கொண்டு அதனை நிஷேதிக்கும்போது; அவளுடைய பெருமைக்குப் பெருங்

கொத்தையாம். உலகத்திலுள்ள எல்லா உத்தம ஸ்திரீகட்கும் விச்லேஷத்தில் நிலைபிதுவாயிருக்க அதை இவளுக்கு ஏற்றமாக எடுத்துக்காட்டுவது பொருந்துமோ? மேலும் நாட்டிலுள்ளாரிலும் இவளுக்குப் பெருமைகாட்டவேண்டி "சுபாநி நிமித்தாநி பேஜிரே" என்கிறவிடத்தில் முகப்பிலே தோற்றுகிற அர்த்தத்தைவிட்டு, சிரமப்பட்டு அர்த்தமருளிச்செய்த நம்பிள்ளை திருவுள்ளத்திற்கும் பொருந்தாது. ஆகையால் அஸதிகளுக்கும் பர்த்ருவிச்லேஷத்தில் சிலகாலம் அநுஸரிக்கக்கூடியதாயும், ஸதிகளுக்கு ஸர்வஸாதாரணமாய் எப்போதுமுள்ளதான ஹர்ஷாபாவத்தையும் துக்காநுபவத்தையுங்கொண்டு இவளுக்கு ஒரு ஏற்றஞ்சொல்வது ரிஷிக்கும், உலகாரியனுக்கும் திருவுள்ளமாகாது.

இனி, இருவர் திருவுள்ளத்தை ஒத்து நோக்கும்போது இவள் நிஷ்டையைக்கொண்டு தெளியவேண்டிய ஸித்தோபாய நிஷ்டைக்கு அவசியம் வேண்டுவதான ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய நிவ்ருத்தியை இங்கு இரண்டு பதமும் காட்டியதாகக்கொள்ளவேண்டும். ரக்ஷணமாவது-அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வகேஷ்ட ப்ராபணமேயாகும். அதில் இவளுக்கு அநிஷ்டம் விச்லேஷத்திலுண்டான துக்கம். தந்நிவ்ருத்திக்கு இவள் ப்ரவ்ருத்திபண்ணாது துக்கத்தை அநுபவித்திருந்தாளாகையாலே அநிந்திதையானாள். அதாவது தனக்கு துக்கநிவ்ருத்தியைவேண்டி இராவணனை "பஸ்மீபவ" என்று சொல்லியிருந்தாளாகில் ஸ்வரக்ஷணத்தில் ஸ்வப்ரவ்ருத்தியாய்க்கொண்டு ஸித்தோபாய நிஷ்டைக்குக் கொத்தையாய் விடும். அப்போது இவள் நிந்திதையாய்விடும். ஆகையால் அது செய்யாதே துக்கத்தை அநுபவித்தாளாகையாலே அநிந்திதையானாள். அப்படியே இவள் இராவணனுக்கு வசப்பட்ட இச்சரீரத்தைவிட்டுச் சரீராந்தர பரிக்ரஹம பண்ணிப் பெருமானையடைந்து சந்தோஷத்தையடைந்தாளாகலாம். அப்படியாகில் இஷ்டப்ராப்தி ரூபமான தன்னுடைய ச்ரேயஸ்ஸுக்குத் தானே ப்ரவ்ருத்திசெய்தாளாகையால் அப்போதும் ஸ்வரக்ஷணாந்வயமாய் ஸித்தோபாயநிஷ்டை குலையும். இவளும் நிந்திதையாவாள்.

தொடரும்.

ஸ்ரீ:

ஊர்த்வ புண்ட்ர நிரூபணம்.

[ஸ்ரீரங்கம் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபா பண்டிதரும்,
நியாயவேதாந்த வித்வானுமாகிய ஸ்ரீ. உ. வே.
ரங்கஸாமி ஐயங்கார் ஸ்வாமி எழுதுவது.]

ஸ்ரீய:பதியாகிய ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹ சேஷபூதர்களாகிய பரமைகாந்திகளுக்குப் பஞ்சஸம்ஸ்காரங்கள் லக்ஷணமாக ச்ருதி ஸ்ம்ருதி பாஞ்சராத்ராதிகளில் சொல்லப்பட்டுள்ளன. பஞ்சஸம்ஸ்காரமாவன.— * "[illegible]" "தாப: புண்ட்ரஸ் ததா நாம மந்த்ரோ யாகச்ச பஞ்சம:, அமீ பரம ஸம்ஸ்காரா: பாரமைகாந்த்ய ஹேதவ:" என்பன. இவற்றுள் தாபமாவது § திருவிலச்சினை தரிப்பது. புண்ட்ரம்-ஊர்த்வ புண்ட்ரம். மந்த்ரம்-திருவஷ்டாக்ஷர முதலிய மந்த்ரம். யாகமாவது-பாஞ்சராத்ரத்திற் சொல்லப்பட்ட முறைப்படி பகவதாராதனஞ் செய்வதாம்.

பெண்களின் மணமுடைமைக்கு ஞாபகங்களான வளையல் முதலான ஆபரணங்கள் பர்த்தாவும் அவனைச் சார்ந்தவர்களும் உபலாளனஞ் செய்வதற்கும், மற்றவர்கள் ஒட்டறுவதற்கும் காரணமாவனபோல இந்தப் பஞ்சஸம்ஸ்காரங்கள் நாடுநகரமுநன் கறிய விலக்ஷணர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆதரத்திற்கும், ஸம்ஸாரிகள் அநாதரத்திற்கும் காரணங்களாமென்பதில் ஓர் ஐயமுமில்லை.

---

* பாராசர ஸம்ஹிதை.

§ திருவிலச்சினையாவது-ஹோமத்தீயில் தப்தஞ் செய்யப்பட்ட சங்க சக்ர சின்னங்களைத் தோள் மூலங்களில் தரித்தலாம்.

இந்தப் பஞ்சஸம்ஸ்காரங்களில் ப்ரதானம் ஊர்த்வ புண்ட்ரம். அஃதாவது ஊர்த்வகதியாகிய மோக்ஷத்திற்குச் சாதனமாகிய திருமண்காப்பினால் நெற்றி முதலியவிடங்களில் தரிக்கப்படும் புண்ட்ரம். விஷ்ணு க்ஷேத்ரங்களிற் கிடைத்த வெளுப்பு மண்ணைக் கொண்டு ஊர்த்வ புண்ட்ரம் தரிக்கத்தக்கது. இதனை, "𑌪𑍋𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌸𑍁𑌲𑌭𑌂 𑌸𑍁𑌕𑌰𑌂 𑌯𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌮𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌂 𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌸𑍀𑌤𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑌰𑍇𑌤𑍍" "போபவித்ரம் ஸுலபம் ஸுகரம் யத்விஷ்ணு க்ஷேத்ரம் தத்ரம்ருத்ஸ்நாம் ச்வேதாம் உத்ருதாவஸீத்யுத்தரேத்" பரிசுத்தமானதும் ஸுலபமாயுமுள்ள விஷ்ணு க்ஷேத்ரத்தில் வெளுப்புநிறமுடைய மண்ணை 'உத்ருதாவஸி' என்ற மந்த்ரத்தால் எடுக்கவேண்டும் என்னும் பொருளுடைய காத்யாயனோபநிஷத் வாக்யத்தாலும், "𑌶𑍍𑌰𑍀𑌕𑌰𑌂 𑌪𑍀𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌦𑌂 𑌶𑍁𑌭𑌂" "ஸ்ரீகரம் பீதமித்யாஹு: ச்வேதம் மோக்ஷப்ரதம் சுபம்" மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது வெளுப்பான மண் என்கிற பொருளுடைய பாத்மோத்தரம் 224-ம் அத்யாயத்திலுள்ள வசனத்தாலும் நன்கறியலாம். இந்த விஷயத்தில் ஒரு விவாதமுமில்லை. இனி, ஊர்த்வ புண்ட்ரத்தின் ஆகாரம எவ்விதமிருத்தல்வேண்டும் என்பதே விவாதவிஷயமாவதால் அதன்விவரம் இங்கு விரிவாக நிரூபிக்கப்படுகிறது.—

மஹோபநிஷத்தில், "𑌹𑌰𑍇𑌃 𑌪𑌾𑌦𑌾𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌹𑌿𑌤𑌾𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌛𑌿𑌦𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌯𑍋 𑌧𑌾𑌰𑌯𑌤𑌿 𑌸 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌸 𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌸 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿" "ஹரே: பாதாக்ருதி மாத்மநோ ஹிதாயமத்யே சித்ரமூர்த்வ புண்ட்ரம் யோதாரயதி ஸபரஸ்ய ப்ரியோபவதி ஸபுண்யவான் பவதி ஸமுக்திமான் பவதி" என்று சொல்லப்பட்டுளது. இதன் பொருளாவது:— தன்னுடைய ஹிதத்தைக் கோருகிற விலக்ஷண முமுக்ஷுவான எவன் நடுவில் இடைவெளியுள்ள ஹரிபாதாகாரமான ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்கிறானோ அவன் பரமபுருஷனுக்குப் பிரியனாகிறான்; அவன் புண்ணியவானாகிறான்; மோக்ஷத்தைப் பெறுகிறான்; என்பதாம். இந்த ப்ரமாணத்தால் ஊர்த்வபுண்ட்ரமானது ஹரியின் பாதாகாரமாகவிருத்தல் வேண்டுமென்பது புலப்படுகிறது.

இனி த்வயார்த்தநிஷ்டராகிய எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளைப்பற்றினவர்களாகையாலும், "தண்டாமரை சுமக்கும் பாதப்பெருமானை" என்கிற ஆழ்வார் அருளிச்செயலின்படி எம்பெருமானுடைய திருவடிகள் தாமரைப்புஷ்பமாகிய பீடத்தால் சுமக்கப்பட்டிருக்கும் என்கிற ஔசித்யத்தாலும், ப்ரமாண பாஹுள்யத்தாலும், பீடத்துடன் கூடிய இரண்டு திருவடிகளின் மத்தியில் பெரியபிராட்டியார்மேல் நிரூபிக்கப்படுகிறபடி ப்ரமாண ப்ரஸித்தமான சிவப்பு ஸ்ரீசூர்ணத்தால் எழுந்தருளியிருப்பதாகத் தியானஞ்செய்யவேண்டியிருப்பதாலும், அங்ஙனமே மேலக்கோட்டைத் திருநாராயணபுரத்தில் திருநாராயணன் செலவப்பிள்ளை இவர்களது திவ்யமங்கள விக்ரஹத்தில் திருவடிகளினிடையே பிராட்டியார் எழுந்தருளியிருப்பதாலும், திருமண்காப்பை எம்பெருமானுக்குபகரித்து அதைச் சாத்திக்கொள்ளும் க்ரமத்தைத் தன திருவடி நிலையைக்காட்டும் வகையால் தெரிவித்ததுபற்றி, "ஹ்ருதி விஸ்ருத ரோஹாத்ரா: ஸ்ரீரமாசிஷ்ட சரண யுகம:" "க்ராந்த விசருத மாஹாத்ம்யா: ஸ்ரீரங்காதிஷ்ட மூர்த்தய:" இத்யாதி வசனத்தாலும் சிறிது விகஸிதமான புஷ்பத்தில் நிலைபெற்று நின்ற எம்பெருமானது திருவடிகளின் நிலைதான் தர்க்கானுக்ராஹீதானந்தாவஸித்த ப்ரமாணஜாதோபோத்பலித ஸத்ஸம்ப்ரதாய ஸித்தம்.

தொடரும்.